படாளத்தில் போலீஸ் அவுட் போஸ்ட்.

*531 வினா.—திரு. கொளத்தூர் கோதண்டம்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுராந்தகம் வட்டத்தில் படாளத்தில் போலீஸ் O.P. திறக்கின்ற செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:

இல்லை.

திரு. கொளத்தூர் கோதண்டம்: படாளம் ஒரு தொழிற்சாலைப் பகுதியாகையால் ஆலை நிர்வாகத்தினர் இனமாக ஒரு கட்டிடம் கட்டித் தர முன் வந்தால் ஒரு அவுட் போஸ்ட் போலீஸ் ஸ்டேஷன் ஏற்படுத்த அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அப்படிக் கொடுத்த பிறகு வேண்டுமானால் அதைப்பற்றி யோசிக்கலாம்.

Sub-Court for Kancheepuram.

* 544 Q.—Thiru K. VINAYAKAM :
Thiru V. SWAMINATHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(a) whether a sub-court has been opened in Kancheepuram, Chingleput District; and

(b) the reason therefor?

மாண்புமிகு. திரு. செ. மாதவன்:

(அ) ஆம்.

(இ) தலைமைத் துணை நீதிமன்றம், கூடுதல் துணை நீதிமன்றம் என்று செங்கற்பட்டில் இரண்டு துணை நீதிமன்றங்கள் இருந்தன. செங்கற்பட்டு, பூவிருந்தவல்லி, காஞ்சிபுரம், திருவள்ளூர், திருத்தணி முன்சீப்களடங்கிய செங்கற்பட்டு மாவட்டம் முழுவதிலும் அவற்றிற்கு அதிகாரவரம்பு உண்டு. இந்த நீதிமன்றங்களில் பல வழக்குகள் முடிவு பெறுமலேயே இருந்தன. பணி முழுவதையும் இரண்டு துணை நீதிபதிகளால் கவனிக்க இயலவில்லை, அதன் விளைவாக, கூடுதல் துணை நீதிபதி ஒருவரை நியமிக்க வேண்டிய தேவை பெரிதும் உணரப்பட்டது. வழக்காடும் பொதுமக்களின் நலனுக்காகவும், வளர்ந்துவரும் காஞ்சிபுரம் நகரத்தின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டும் செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள துணை நீதிமன்றத்திற்கு கூடுதல் துணை நீதிபதி ஒருவரை நியமிக்க ஒப்பளிப்பு வழங்குவதற்குப் பதிலாக, காஞ்சிபுரம், திருத்தணி, திருவள்ளூர் முன்சீப்கள் மீது அதிகார வரம்புள்ள வகையில் காஞ்சிபுரம் நகரில் துணை நீதிமன்றம் ஒன்றை அமைக்க 1969 அக்டோபர் திங்களில் அரசு முடிவு செய்தது. காஞ்சிபுரத்திலுள்ள துணை நீதிமன்றம் 1969-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 5-ம் நாள் முதல் செயல்படத் தொடங்கியது.

1970 மார்ச் 25]

THIRU K. VINAYAKAM: After the opening of the sub-court at Canjeevaram, the number of cases are not so much as to justify its existence. That is the complaint of the Judge himself. What steps are bting taken by Government so as to justify it or make it a viable unit? Will the Government extend its area of operation by including one more taluk under the jurisdicion of that Court?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மாவட்ட நீதிபதிகளின் பரிந்துரையின் மேல் உயர் நீதிமன்றம் வருகிற வழக்குகளைக் கணக்குப்பார்த்துதான் புதியதாக துணை நீதிமன்றம் ஏற்படுத்துகிறோம். வேலை இல்லை என்று தெரிந்தால் அதை எடுத்துவிடுவோம்.

அரக்கோணத்தில் உருக்கு வார்ப்படத் தொழிற்சாலை.

***545 வினா—திரு. எஸ். ஜே. இராமசாமி:** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் நகரத்தில் ரஷ்ய நாட்டு ஒத்துழைப்புடன் ஸ்டீல் காஸ்டிங் பிளான்ட் (steel casting plant) தொழிற்சாலை நிறுவும் வேலை எந்த நிலையில் உள்ளது?

(இ) மேற்படி தொழிற்சாலைக்கான கட்டடம், இயந்திர சாதனங்களுக்காக ஆரம்ப முதல் இன்று வரையில் செலவழிக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(உ) எத்தனை பொறியியல் வல்லுநர்கள் அமர்த்தப்பட்டுள்ளார்கள்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்:

(அ) இத்தொழிற்சாலைக்கு வேண்டிய நிலம் கையகப்படுத்தப்பட்டு, இத்திட்டத்திற்கென்று ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின்சார வாரியம் மின்சக்தி வழங்க உறுதி தந்துள்ளது. தனித் துணை மின் நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது.

பொதுச் சுகாதாரப் பொறியியல் பணித்துறை, நீர் வழங்கு வசதிகள் செய்து தந்துள்ளது. தேவைப்படும் மேல் நிலைத் தொட்டிகளும் சேமிப்புத் தொட்டிகளும் கட்டப்பட்டுள்ளன. தொழிற்சாலைப் பகுதி வரை கிளை-இருப்புப்பாதை அமைக்கப்பட்டுள்ளது; அதன் வழி வண்டிகள் சென்று வருகின்றன.

இயந்திரங்கள், சாதனங்களில் 90 சத விகிதம், தொழிற்சாலைப் பகுதியை வந்தடைந்துள்ளது. உள் நாட்டில் உற்பத்தியான கருவிகளும் வாங்கப்படுகின்றன.

பல்வேறு கட்டிட வேலைகள் நடந்தேறி வருகின்றன. வேலையினங்களில் பல முடிவடைந்துள்ளன.

(இ) இத்தொழிற்சாலைக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 7 கோடியில் இதுவரை ரூ. 168.56 லட்சம் இதற்காகச் செலவிடப்பட்டுள்ளது.